தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 மார்ச் 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 201, 202, 203 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திருப்புவனம்—புல்வாய்க்கரை சாலை

* 204 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம்—புல்வாய்க் கரை நெடுஞ்சாலையினை சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ரூபாய் 75,500 செலவில் இச்சாலை செப்பனிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் மலைச்சாலைகள்

* 205 வினா—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலுக்காவில், பெரும்பாறையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும், பண்ணைப்புரத்திலிருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் மலைச்சாலைகள் அமைப்பது குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இப்பொழுது கொடைக்கானலுக்கு அதிகமான பயணிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். கேள்வியில் குறிப்பிட்டிருக்கக்கூடிய மலைச்சாலைகள் அமைப்பதால் அப்பகுதி மக்களுக்கு வசதி ஏற்படும் என்று கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பாதைகளை அமைப்பது குறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிடுகிற கொடைக்கானல்—பழனி ரோடு வேலை நடந்து கொண்டு இருக்கிறது. அநேகமாக இந்த வருஷத்திற்குள் முடிந்து விடவேண்டுமென்று போட்டிருக்கிறோம்.

கொடைக்கானல் தாலுக்காவில் பெரும்பாறையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் பண்ணைப்புரத்திலிருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் பாதைகள் அமைப்பது குறித்து கேட்டிருக்கிறார்கள். இது முழுமையாகச் செப்பனிடப்படுமா என்று கேட்டதற்கு "இல்லை" என்று தெரிவித்திருக்கிறேன். இடையிலே சில பாதைகளை எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு பாச்சலூர்—ஒட்டன்சத்திரம் (வழி வடக்காடு) பாதை 34.80 கிலோமீட்டர் தூரம், 44 லட்ச ரூபாய் செலவில் இவ்வேலை நடைபெற்று வருகிறது. அதே போல், தடியன்குடிசை—கே. சி. பட்டி சாலை 13.8 கிலோமீட்டர் தூரம். இச்சாலை போடும் வேலை மத்திய சாலை நிதித் திட்டத்தில் நடைபெற்று வருகிறது. அதேபோல், ஆடலூர்—கே. சி. பட்டி ரோடு போடும் வேலையும் மத்திய சாலை நிதித் திட்டத்தில் நடைபெற்று வருகிறது. பாச்சலூர்—ஒட்டன்சத்திரம் பாதையும் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 44 லட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மீதி உள்ள இடங்கள் நிதிப் பற்றாக்குறை காரணமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. கே. எஸ். கோதண்டராமையா எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மதுரை மாவட்ட சாலைகள் பற்றியது . . .

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, these ghat roads are very important and especially in the northern portions of our State in Dharmapuri district at Harur and Hosur taluks there are a number of ghat sections. There are no roads in many places and where there are roads, they require immediate repairs. May I know from Hon. Public Works Minister whether he will prepare a scheme to see that all these ghat roads are improved and kept well.

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is very unfortunate that the hon. Member has not brought it to the notice of the Government. I request him to send a detailed note abour it. We will examine it.

பம்புசெட்டுகள் வாங்கக் கடன்கள்

* 206 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் வாங்குவதற்குக் கடன் வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மின் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் நிதி முடக்கம், மூலப்பொருள்கள் கிடைக்கப் பெருமை மற்றும் மின் தட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக மின் விசையேற்றங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் மின் விசையேற்றங்களைப் பயன் படுத்த இயலாமையினுல் நிலவள வங்கிக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் போய்விடும். இக்காரணத்தினுல் விசையேற்றத்திற்குக் கடன் வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. டீசல் விசையேற்றங்களுக்குக் கடன் இப்பொழுது வழங்கப்படுகிறது.

திரு. அ. ஆறுமுகம் . தலைவர் அவர்களே, கடந்த மூன்றுண்டு காலமாக நிலவள வங்கிகளிலிருந்து கடன் வாங்கிய விவசாயப் பெரு மக்கள் கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் மிகவும் கஷ்டப்படு கிருர்கள். மின் இணைப்பு கிடைக்கும் வரையில் வட்டி கட்ட வேண்டியதில்லை என்ற வகையில் விதியைத் தளர்த்த அரசு முன் வருமா?